உ

சிவமயம்.

வீராணத்தேரி

வெள்ள விளக்கம்.

இது.

சிதம்பரம் தாலுக்கா
கூளப்பாடி தென்பாதி
பொ. பஞ்சநத வன்னியரால்
இயற்றியதை

சிதம்பரம்
புஸ்தக ஷாப் கீப்பர்
C. G. இராமாநுஜம்
செட்டியார் அவர்களால்

சிதம்பரம்

ஸ்ரீபாலாம்பிகாவிலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

24-11-13

விலைகாலணா

சிவமயம்.

வீராணத்தேரி
வெள்ளவிளக்கம்.

விநாயகர் காப்பு.

கங்கை பெருகிக் கரையழித்துப் பூமியினில்
எங்கும் நிறைந்ததனால் யார்முற்ற—பொங்குதுயர்
செந்தமிழிற் பாடச் சிவையருளா னீன்றருள்வேற்
கந்தற்கு முன்னவன்றாள் காப்பு.

நூல்.

வெள்ளம் வந்ததைப்பார் மிகப்பெரு
வெள்ளம் வந்ததைப்பார்

வள்ளல் பிரமாதீச வருஷமைப்பசிமாதம்
வரிசைபெறுமிரு பத்துநாலாந்தேதி
கொள்ளுமாதிவாரம் கூறும்பூரட்டாதி
கொள்ளையடிக்கின்ற கள்ளனைப்போலவே

கூடிப்பயிர்—வருவேளையில்
மேடிட்டது—ஒருநாளையில் (வெள்ளம்) (1)

சித்திரைமாதமுதல் மழையேயில்லாமல்
சிங்கமதியிற் கொஞ்சம் மழைத்துளிசேர்தலும்
அத்தை நரம்பில் கோர்பயிர்செய்திட
ஐப்பசிமாதத்தில் மழைமிகப்பெய்திட

ஆடுங்கிழ—மாடும்புழ
வீடும்விழ—சாடுஞ்சுழல் (வெள்ளம்) (2)

ஆடியிலேரியில் ஜலம்பெருக்காகவும்
ஆவணிதனிலது அடியோடேபோகவும்
பாடின் சோதிடர் மழைபெய்யுமென்னவும்
பாரினிலுள்ளவர் பதைத்துயர் வாடவும்

படியுங்கெட—குடியும்பட
இடியும்பட—மிடியும்பட (வெள்ளம்) (3)

காசிபிடபம் மிதுனமங்காரகன்
கன்னிக்கெறெடுபுகர் சூரியனுங்கோவில்
வீரிய சிங்கத்தில் கேதுகும்பமதி
வில்லிஸிலாசானு மேவியிருந்திட

விதியின்படி — சதிசெய்திடு
அதிகங்கடு — மழைபெய்ததடி (வெள்ளம்) (4)

வேறு

அதிசயங்கேளீர் மழைவெள்ளத்தால்வந்த
அவதியைப்பாரீர்

1 அதிசயம் பாருங்கள் அவனியுள்ளோர்களே
அடமாகநாலுநாள் அதிகமழைபெய்ய
நதிகுளமேரிகள் நாடெங்குமே நெய்ய
நன்னீஜலம் பொங்கப் பண்ணினமழையைப்

நாற்பது சேராம்
காடுமேடெங்குப் பார்த்தாலும் நீராம்

2. ஆறுகுளங்களேரி யெங்கும் கரையுடைக்க
அடுத்த கிராமமெல்லாங் கடல்போல்ஜலம்பிடிக்க
ஊர்களில் வீடுகள் சிலபலவாய்விழ
உள்ளேயிருந்தவர் கோவென்றலறியழ

என்ன அபாயம்
இனிப்பிழைப்பதற் கேதோவுபாயம்

3. பரபரப்பாய் மேட்டைப் பார்த்தேயோடினபேரும்
பணத்தாசையாலுயிரைப் பாழாயிழந்தோரும்
மரத்திலேறிக்கொண்டு மனதுதிகைத்தோரும்
மனைவிமக்களுக்காய் விக்கியழுதோரும்

சொல்லவொண்ணாது
ஆதிசேஷனும் பன்னநண்ணாது

4. மாடுகள் கன்றுகள் மாவெள்ளத்திற்போக
மனமிரங்கிப்பலர் அவற்றைபிழுத்துச்சாக
ஆடுகுட்டிகள்பன்றி அனைத்தும்ஜலத்திற்போச்சு
அவைகளுக்குரியார் வாய்அடித்துக்கொண்டழலாச்சு

இதுவென்ன விதியோ
பிரமன்செய்த [illegible]வியோ

Best copy available

5. பெண்பிள்ளை போக ஒண்டியானார் பலர்
பேசாமலே பெருமூச்சு விட்டார் பலர்
வண்டி மாடுகளெல்லாம் போச்சே யென்பார் பலர்
வரிசையாய் வீட்டின் மேல் வந்தேறினார் பலர்

இதுவென்ன காலம்
ஆ! வந்ததே விபரீத கோலம்

6. இப்படியாய்ப் பலர் எண்ணிக் கண்ணீர் விட
எதிர்ப்பெட்டி பேழை விரைவாய் மிதந்தோட
அப்பெட்டி வேண்டியே அன்போடெடுத்திட
அதற்குள் இறங்கியோர் ஆவி துடித்திட

விடுத்தனரையா
பொருள் பலர் விடுத்தனரையா

7. குத்துமரா லுலக்கை நேர்ந்தே தப்பழு தோரும்
குந்தியிருந்த கூறைக் குடிசைக் கழு தோரும்
இத்தனை போகவு மிருந்தோமென்றழுவோரும்
ஏரிக்கரை மேலே நின்றே யழுவோரும்

புயல்வெள்ளமிதுவோ
பிரளயவெள்ளம் பொங்கிவந்ததுவோ

8. மாடமாளிகைகளும் அடிபோடே சாய்ந்தது
மட்டில்லா தானமான் ஜலத்திலே மிதந்தது
கூடும் நெற் சேர் சேறு கொண்டு மறைந்தது
கோடிமரங்கள் வேர் குலைந்தே தமியாழ்ந்தது

வைக்கோலின் போரு
வரிவரியாய் வருவது நேரு

9. வெள்ளாற்றோரந் திரு வட்டத்துறையாமூர்
வெள்ள வேகத்தினில் வந்ததவ்வூரின் தேர்
விள்ளும் பெலாந்துறை யணையிலத்தேர் தாங்க
வெகுபல முள்ளவவ் வணையில் ஜலம் தேங்க

அணைக்கட்டும் போச்சே
அளாவிலாப் பிணைக்கட்டுமாச்சே

10. வெளிஜலமெல்லாம் வீராணத்தேரி வாங்க
விருதாவிலே போட்ட உள்கரை தனில் தேங்க
அளவிலாத ஜலம் அந்தக்கரையிலோங்க
அந்தக்கரை புடைத்து பழையகரையில் தாங்க

கரையின் கீழ் உள்ளார்
இந்தமோசக் காரணமில்லார்

11. ஆதிவாரம் பொழு ததுவுமறைந்து போச்சு
அதிகமானமழை யன்றும்பொழியலாச்சு
ஏதுங்குறைவில்லாமல் இராப்பத்து மணிபோச்சு
எதிகரைக்குமேல் ஜலம்பின் வழியலாச்சு
கடலொலி—போலே
ஜனங்களும்—காதில்கேட்டாரே.

12 ஓடிவந்துபார்க்க யுகமுடிவிதுவென்று
ஓட்டமாகவோடி மாட்டையோட்டிக்கொண்டு
அடிக்கரைமேலே வந்துநின்றுகொண்டு
வருந்தினாரெல்லாம் வெள்ளமானதுகண்டு
மணிபன்ரெண்டாச்சு
வடவாறேரி யன்பத்தோருடப்பாச்சு

13 வெகுவாய்ப் பெருகிவந்த வெள்ளந்தனைக்கண்டு
வெகுவயது சென்ற கிழவர்பயங்கொண்டு
தருமமீதா கண்டிலம் கேட்டிலமெனவிண்டு
தளர்ந்தனர் வெள்ளமும் தாவிக்கீழ்த்திசை கொண்டு
கூச்சல்களாச்சு
சிதம்பரந்தனிலுள்ளார் பேச்சு

14 வீதி வீதியாக வீடெல்லா மிடிந்தது
வேகமான றெயில் றோட்டுமிடிந்தது
மோதிச் சென்ற ஜலம் கடலோ டெதிர்த்தது
மிரண்டு ஜனங்களும் கலங்க அதிர்த்தது
டெலிபோனும் போச்சு
ட்ரெயின்களு நின்றிடலாச்சு

15 மேற்கே சேலஞ்ஜில்லா வெள்ளாறுதலைப்பாக
மேன்மையான கீழ்க் கடல்கண்டமட்டுக்கும்
தெற்கினில் கொள்ளிடம் வடக்கில் கடலூர்மட்டும்
திரண்ட வெள்ளத்தாலே சேதமானபொருளை
யான் சொல்லப்போமோ
மற்றெவர் தாஞ் சொல்லலாமோ

16 என்ன செய்வோமென்று ஏங்கியழுதபேரும்
இருந்த பொருள் போகத் தூங்கி விழுந்தோரும்

அன்ன மன்ன மென்று அலைந்துமடிந்தோரும்
அண்ட விடமில்லாமல் கண்ட விடஞ் சென்றோரும்
கேவென்று அழுதார்
கடவுளைக் கும்பிட்டே தொழுதார்

வேறு

கொண்டிச்சிந்து

ஆங்கிலேயராளுகையில்—ஆண்டு
ஆயிரத்துத் தொளாயிரத்துப்பதின் மூன்றில்
நவம்பர் மாதமதில்—தேதி
நவமா திவாரநாள் பூரட்டாதி
வெள்ளாறு தலைப்புமுதல்—முடிவு
குணக்கடல்மட்டுந் தெற்கேகொள்ளிடமுதல்
வடக்கேகடலூர் மட்டும்—வெள்ளம்
வந்தவதிசயத்தைச் சொல்லிடுவேன்
அதிகமழைபொழிய—வெள்ளாறு
அருகிலிருந்த வூர்களையழிக்க
வடவாறு வீராணம்—வெள்ளாறு
வாலாஜா ஏரியெல்லாம் கரைபுரள
இரவினில் கரையுடைக்க—வடவாறு
எடுத்தது நாற்பத்துநான்குடைப்பு
வீராணமேழுடைப்பு—வெள்ளாறு
வாலாஜா ஏரியிலே வெகுவுடைப்பு
நாட்டேரி நான்குடைப்பு—ஜலத்தால்
நாசப்படுத்தின பலவூரை
வெள்ளம் புரண்டோட—சாமான்
மிதந்தவதிசயத்தைச் சொல்வேன்கேளும்
குந்தாணியுரலுலக்கை—குடை
குண்டுசட்டி கலப்பை நுகத்தடியும்
வண்டியும் மாடுகளும்—வாயிற்
கால்பூட்டு பூட்டிய கதவுடனே
பெட்டி விசிகள் கமுச்சி—அகப்பை
பெருங்கூட்டுடனவரிவாள் மணையும்
செப்புக்குடமண்டா பானை—செம்பு

இடமான கொப்பறையு மனைக்கூடை
சற்றமரஞ்சாலுங் கோலும்—இன்னும்
எண்ணவொண்ணாப் பொருள்களுஞ் சேதமாச்சு.
பெட்டியைப் பிடித்த பிடியாய்—ஜலத்தில்
போனதனேக பிணம்—சமுத்திரத்தே
வண்டியைப்பிடித்த பிடியாய்—மிதந்து
வாரிதியிற் போயின வனேகபிணங்கள்
மாட்டைப்பிடித்த பிடியாய் ஜலத்தில்
மாண்ட பிணத்தையென்றால் சொல்லப்போமோ
கட்டடங்கரையாமல்—புரட்டி
கரையிலொதுக்கினது சிலவூரில்
தேர்போன்ற ஆலமரங்கள்—வேருடன்
திசைக்குத்திசையாக வீசினதே
குறவர் குடிசையன்றி—கழுதையும்
கும்பல் கும்பலாய் வெள்ளங்கொண்டு போச்சே
இடையர்களாட்டுமந்தை—ஒன்றேனும்
இல்லாமல் அடியோடே இறந்துபோச்சே
வேர்க்கடலைச் செடிகள்—வெகுவாய்
வீராணமேரியில் மிதக்கலாச்சே
பண்ணிய பயிரெல்லாம்—ஐயையோ
பாழாகிக்கூழாகிப்படிந்து போச்சே
பறையர்களெல்லாரும்—இப்போது
பல்விதகஷ்டத்தால் பதைக்கின்றார்கள்
இறைவன் விதிப்படியே—உலகீர்
எல்லாமாகுமென்று எண்ணுவீரே.

(தந்தன தன தனனம்)

கும்மி

கும்மியடி பெண்காள் கும்மியடி பெண்காள்
கும்மியடி பெண்காள் கும்மியடி
நம்மையாளுங் கலைமகள் பாதத்தை
நாடிக்கும்மி யடியுங்கடி.
புவியிற்பெருகிய வெள்ளப்புதுமையென்
புன்சொல்லினாற்கவி பாடுதற்கு
கவிவல்லோர்களிரு பாதமலரைக்கையால்
கட்டிப்பிடித்தே னெனைக்காரும்.
ஊர்சொத்துக்காசை வைக்காதறஞ் செய்பவர்க்
கோங்கியேவாழ்வு பெருகுதல்போல்
பார்நிறைத்திட்டபேர் வெள்ளப்புதுமையின்
பண்பினைப்பாருங்கோள் நேசர்களே.

உண்டவர்வீட்டிற் கிரண்டகமேசெய்து
உதைப்பேனென்றே சொல்லுமாபாவி
சண்டாளன்வம்ச மழிவதுபோல்வெள்ளம்
தான்வடிந்திட்டது நேசர்களே.
இப்படியாகீத்தம் பெருகிவடிந்திட
இட்டபயிர் வெகுநஷ்டப்பட
தப்பிப்பிழைத்திட்ட ஏழைஜனத்திற்கு
தங்கநிழலும் கிடைக்கலையே.
கஞ்சிகுடிக்க வழியுமில்லைசேனை
கடன்கொடுப்பவ ராருமில்லை
கெஞ்சிக் கெஞ்சிக்கூவி பிச்சையெடுக்கிற
கெடுதி முன் செய்தபாவமிது.
நல்லவதிர்ஷ்ட முடையோர்கள்வாயால்
சொல்லவொண்ணாத பொருளெடுத்தார்
பொல்லாவதிர்ஷ்ட முடையவர் தேடிய
பொருண்முழுமையுமே போக்கடித்தார்.
எவ்வளவோமழை பெய்ததுண்டுவெள்ளம்
இப்படிவந்திடப் பார்த்ததில்லை
இவ்வளவுவெள்ளம் வந்ததென்றுமுன்னோர்
எடுத்துரைக்கவுங் கேட்டதில்லை.
கஷ்டமடைந்திட்ட குடிகளைக்கண்டே
கவர்ன்மெண்டாரு மனமிளகி
நஷ்டப்பரிகாரஞ் செய்திடமுன்வந்தார்
நங்கள் கவர்ன்மெண்டு வாழியவே.
பத்துக்குற்றங்களும் பரவியுயர்ந்திட
பத்தழகுத்தியும் பற்றாதே
இத்லைதயியற்றினன் நங்கைப்பாட்டென்றுமே
எண்ணியுலகினரேற்றருள்க.

வாழி விருத்தம்.

இந்தியாதேசம்வாழி யெழிலேந்தாம் ஜார்ஜ்வாழி
மந்திர முழுதுணர்ந்த மறையவர் மனுக்கள்வாழி
சுந்தரப் பஞ்சநாதன் சொற்குற்றம் பொறுப்போர்வாழி
இருதநற் கவிபடித்தோ ரியலுடன் வாழிவாழி.

வீராணத்தேரி வெள்ளவிளக்கம்

முற்றும்.